[1970 மார்ச் 24

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) அண்மையில் 17—3—1970-இல், இக்கோரிக்கையைத் தற்பொழுது ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை என அரசு அறிவித்துள்ளது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அதையடுத்த பொள்ளாச்சி, ஈரோடு ஆகிய இடங்களில் மூன்று மூன்று காவலர் நிலையங்கள் இருக்கின்றன. கோவை மாவட்டத் தலைமைப் போலீஸ் அதிகாரியையும், பிராந்தியப் போலீஸ் அதிகாரியையும் இதுபற்றிக் கேட்ட நேரத்தில், 'நாங்கள் சிபார்சு செய்து அனுப்பியிருக்கிறோம். இன்னும் முடியவில்லை' என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சரவர்கள் இதை மனத்திலே கொண்டு புதிய காவல் நிலையமொன்றைத் திருப்பூரில் அமைக்க விரைவில் உத்தரவிடுமாறு மிகப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விரைவில் நம்முடைய நிதி நிலையில் வசதியான காலம் வரும். அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலை நிச்சயமாக உருவாகும்.

*Kilpauk Medical College*

*512 Q.—DR. H. V. HANDE : }
THIRU N. S. V. CHITHAN : } Will the Hon. the Minister for Education and Health be pleased to state the reasons for running the Kilpauk Medical College as a women's institution exclusively?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, மகளிர்க்கென தனிக் கல்லூரியாக இயங்குவதற்கான தனிச் சிறப்பான காரணங்கள் ஒன்றும் இல்லை. இது அரசாங்கம் வகுத்த ஒரு கொள்கையாகும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றநேரத்தில் அரசாங்கம் வகுத்த கொள்கை என்று சொன்னார்கள். ஏனைய கல்லூரிகளில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கும் இந்தக் காலத்தில் பெண்களுக்கு என்று தனியாக இயங்குவதற்கான கொள்கையை வகுத்த காரணம் என்ன? வேறு இடங்களிலும் இதைப்போன்று மகளிர்க்கென மேலும் கல்லூரிகளை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 1965-ஆம் ஆண்டு வரையிலும் கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரியில் ஆடவர், பெண்டிர் இருபாலரும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். நியூ டெல்லியிலே, லேடி ஹார்டிஞ்ஜ் மருத்துவக் கல்லூரி இருக்கிறது. அதில் பெண்கள் மட்டும் சேர்ந்து பயிலுகிறார்கள். அதை

ஒத்த கல்லூரியை இங்கு வைத்தால் என்ன என்ற கொள்கையின் அடிப்படையிலே, 1965-ஆம் ஆண்டிலேயிருந்து பெண்கள் மட்டும் படிப்பதற்கு ஏற்றவகையில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டது. நான்காண்டுக் காலமாகப் பெண்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தார்கள். அதில் ஆண்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மகளிர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். ஆண்களேயும் சேர்த்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது என்பதை உணர்ந்தது, ஏனென்றால், பரிசோதிக்கச் செல்லுகின்ற நேரத்தில் ஆண் நோயாளிகளைப் பரிசோதிக்க ஆண்கள் இருந்து, உடலைப் பரிசோதிக்கும் நேரத்தில் பக்கத்திலே பெண்கள் இருந்து பார்க்க வசதியாக இருக்கும். பெண்களே ஆண் நோயாளிகளைப் பரிசோதிப்பதென்றால் அதனால் பல சங்கடங்கள், இடர்பாடுகள் இருப்பதால், கற்றுக்கொள்ளும் நிலையில், ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து பரிசோதனை செய்ய வேண்டிய நிலையிருந்தால் அந்தக் கஷ்டங்கள் இல்லாமல் இருக்குமென்று கருதப்பட்டது. எனவே, ஆடவரும் சேர்ந்து படிக்கலாம் என்று 6—9—69-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து இருபாலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

## *Master Plan for Madras City*

* 513 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(*a*) whether the Director of Town-Planning has drawn up a Master Plan for the development of Madras Metropolitan area;

(*b*) if so, the salient features of the plan; and

(*c*) the area covered by the plan?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவையின் முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. விநாயகம்:** சார், அந்த மாஸ்டர் பிளான் தயார் செய்யும்பொழுது, தெற்கேயிருந்து வருகிற பிரயாணிகள் வடக்கே போக வேண்டுமென்றால், சென்னையைத் தொடாமலேயே, மவுண்ட் ரோடு, கிண்டியிலிருந்து வேறு பாதை வழியாக நெல்லூர் ரோட்டுப் பாதையிலே சேர்க்க முன்பு யோசனை இருந்தது. ரிங் ரோடு, பைப்பாஸ் ரோடு அல்லது ரவுண்ட் ரோடு, அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்து இப்பொழுது போட முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதற்கான திட்டமும் மாஸ்டர் பிளானில் போடப்பட்டிருக்கிறது. சுற்றுச்சாலைகளும், புறச்சாலைகளும் இடைக்கால வளர்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மெரினு பீச் ரோட்டைக்கூட, கடற்கரையோரமாகக் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்

---

[a] இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.